# ஏழுமலையான்.



அருமறை போற்றிடும் தேவன் நீயன்றோ ,

வருதுயர் போக்கிடும் பரமனும் நீயன்றோ - ஏழுமலையானே !

அருமறை......

ஆழ்கடல் தனிலே உறைபவனே ,

வேழமதைக் காத்திட வந்தவனே ;

ஏழுமலை மீது இன்றமர்ந்தவனே ,

ஏழையெளியோர்க்கு அருள்பவனே !

அருமறை...

மலர்மகள் உறையும் திருமார்பனே ,

இடர்துடைத்திட வந்த மாதவனே ;

சுடர்மிகு ஆழியை கொண்டவனே ,

அலர்மேல் மங்கையை கவர்ந்தவனே !

அருமறை.....